**தலைப்பு 267 - முல்லைத்தீவு மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் மன்னார் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 21 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஆகஸ்ட் 15 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான உரிய மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளதா என்பதற்கு நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது இவ்விடயம் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் என்பவை பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன,

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிச்செயலாற்றல் கூற்றின் பிரகாரம் மற்றும் திறைசேரி புத்தகத்தின் பிரகாரம் மீளாய்வாண்டினுள் மூலதன சொத்துக்களின் கொள்வனவு செலவினங்களிக்கிடையில் ரூபா 4,394,851 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | திறைசேரியின் கணக்குக் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு விரைவில் தீர்க்கப்படும். | வேறுபாடுகளை இணங்காண்பதற்கு தாமதமின்றி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | நிதிச்செயலாற்றல் கூற்றின் பிரகாரம் மற்றும் திறைசேரி புத்தகத்தின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்தின் பெறுமதிக்கிடையில் ரூபா 22,539,817 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | நிறைவடையாத வேலைகளின் அறிக்கைப்படுத்தலுக்காக தேவையான வசதிகளை திறைசேரிப் படிவத்தின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்க வில்லை. | -மேற்படி- |
| (இ) | முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதிக்கூற்றின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்தின் பெறுமதி மற்றும் மீளாய்வாண்டின் அந்த சொத்துக்களின் ஆரம்ப மீதிகயுக்கிடையே ரூபா 5,811,266 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | தவறுகள் திருத்தப்பட்டுள்ளது | -மேற்படி- |

**1.6.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நடைமுறையல்லாச் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 8,589,845 ஆன சொத்துக்களின் மீதி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களிலிருந்து அகற்றப்பட்ட ரூபா 1,210,995 வான சொத்துக்களின் மீதிக்கான விபரமான உப பதிவேடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கிடுதலுக்கான தவறுகளினை திருத்துவதற்காக ஆரம்ப மீதியுடன் ரூபா 8,589,845 தொகை சேர்க்கப்பட்டுள்ளது. அகற்றப்பட்ட சொத்துக்களின் விபரம் வருடாந்த பொருட்கணக்கெடுப்பு ஊடாக கணக்காய்விற்கு சமர்க்கப்படும். | கொடுக்கல் வாங்கல் தொடற்பாக போதிய மற்றும் பொருத்தமான சான்றுகள் காணப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மூலதன மற்றும் மீண்டுவரும் செலவின விடயங்கள் 08 இற்காக ரூபா 103,050,000 கட்டுநிதி திறைசேரியால் வழங்கப்படாமையால் அங்கீகரிக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டினை பயன்படுத்தமுடியாதிருந்தது. | நிரல் அமைச்சின் அறிவுரையின் பிரகாரம் நிதி ஏற்பாடுகள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளமையால் திறைசேரியிடமிருந்து கட்டு நிதி கிடைக்கப்பெறவில்லை | கிடைக்கப்பெற்ற கட்டு நிதியை உச்ச அளவில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இரு மீண்டுவரும் செலவின விடயங்களிலிருந்து ரூபா 250,000 வேறு செலவின விடயங்களுக்கு வகைமாற்றம் மூலம் மாற்றப்பட்டு அத்தினத்திலேயே அந்த செலவின விடயங்களுக்கும் ரூபா 393,000 வகைமாற்றம் மூலம் பெறப்பட்டிருந்தது. | தங்களது கருத்தினை கவனத்தில் கொண்டு எதிர்காலத்தில் இத்தவறுகள் தவிர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேவைப்பாட்டினை முறையாக அடையாளப்படுத்தி வகைமாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்படும் ஒப்பந்த வேலைகளின் ஒப்பந்தத்தின் பிரதி அரச நிதிப்பிரமாணம் பிரிவு 702 (3)இன் பிரகாரம் கணக்காய்வற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மூலதன மற்றும் மீண்டெழும் செலவின விடயங்கள் 28 களின் ஒதுக்கீட்டு சேமிப்புக்கள் ரூபா 20,061,107 ஆக காணப்படுவதுடன் அது தேறிய நிதியேற்பாட்டில் 8 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் அளவிலான வீச்சில் காணப்பட்டது. | பல்வேறு சுற்றறிருபங்களின் பிரகாரம் செயற்பட்டமை, தொற்று நோய் நிலைமை, போக்குவரத்து வசதியீனங்கள், கூட்டங்கள் நடாத்த முடியாமை என்பவற்றினால் சேமிப்புக்கள் ஏற்பட்டன. | ஒதுக்கீடுகள் ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். |

## 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாணடில் புதுக்குடியிருப்பு மற்றும் ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலகங்களினால் கூட்டுமொத்தம் ரூபா 3,256,460 பெறுமதியான எட்டு கொடுக்கல்வாங்கல்கள் நிதிப்பிரமாணம் 137 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டிராது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது | தற்போது சீர்செய்யப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |

## 2.6 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பதவி வறிதாக்கப்பட்ட, பதவியினை விட்டுச்சென்றிருந்த, இறந்த மற்றும் சேவையிலிருந்து ஓய்வு பெற்றிருந்த, அலுவலர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட்டிருக்க வேண்டிய கடந்த 05 தொடக்கம் 26 ஆண்டுகள் பழைய ரூபா 527,134 நிலுவை அறவீடு செய்யப்படுவதற்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை அத்தியாயம் XXIV பிரிவு 4 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தாபன விதிக்கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நெல் கொள்வனவிற்காக மாவட்ட செயலகத்தினால் 2014/15 ஆம் ஆண்டு காலத்தில் 02 விவசாயிகள் பல நோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 18,334,125 இது வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | அனைத்து தொகைகளும் விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |

## 2.7 வைப்பு மீதிகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகம் மற்றும் துனுக்காய் பிரதேச செயலகத்தின் கூட்டு மொத்தம் ரூபா 1,800,000 பெறுமதியான 02 எண்ணிக்கையான வைப்புக்களுக்கு மீளாய்வாண்டின் இறுதிவரை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய முறையில் தீர்வு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும |
| (ஆ) | காணி கொள்வனவிற்காக வரையறுக்கப்பட்ட லங்கா மினரல் சேன்ட் கம்பனியினால் 2012 ஆம் ஆண்டில் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 2,250,000 தொகையானது உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது கடந்த 9 வருடங்களுக்கு மேலாக வைப்புக்கணக்கில் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. | ஆரம்ப உரிமையாளர்கள் இறந்த நிலையில் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளில் கால தாமதமாகியுள்ளது. | உரிய நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தினால் 2020 ஆம் ஆண்டின் ரூபா 1,484,000 தொகைக்கு எண்ணெய் உற்பத்தி இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டு திருமுறிகண்டி கிராம அபிவிருத்தி அமைப்புக்கு வழங்கப்பட்ட போதும் குறித்த இயந்திரம் இற்றைவரை பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்றது. | மின்சார இணைப்பு வழங்கப்படும் பட்சத்தில் இவ் இயந்திரங்களை கொண்டு பயன் பெறமுடியும் என்பதனை அறியத்தருகின்றேன். | இவ் இயந்திரங்களை பயன்கடுத்தப்பட தாமதமின்றி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 03 பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்ட 03 நீர்த்தாங்கி லொறிகள் ஒரு வருடத்திற்கு மேலாகவும், மாவட்ட செயலக வளாகத்தினுள் காணப்படுகின்ற உழவியந்திரமொன்று ஐந்து வருடங்களுக்கு மேலாகவும், பாவனையின்றி காணப்பட்டது. | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சொத்துக்கள் பாவனையின்றி வைக்காதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட அணை கட்டுமானம் தொடர்பில் 154 தாமத நாட்களுக்கான ரூபா 142,321 தாமதக் கட்டணம் அறவிடப்படாமல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சமூக மட்ட அமைப்பினை ஊக்குவிக்கும் முகமாக தண்டாப்பணம் அறவிடப்படாமல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டள்ளது. | ஒப்பந்தத்தின் பிரகாரம் தாமத வேலைகளுக்கு தாமத கட்டணம் அறவிடப்பட வேண்டும். |

**4. மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முல்லைத்தீவு மாவட்ட செயலகம் மற்றும் அதன் கீழ் உள்ள பிரதேச செயலகங்களின் பதவியணியின் 295 வெற்றிடமாகவும் 119 மேலதிகமாகவும் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | தேவைக்கேற்றவாரு வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மேலதிகத்தினை ஆக்கப்பூர்வமான முறையில் ஈடுபடுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் சேவையாட்டியவர்களின் உள்வருகை மற்றும் வெளிச்செல்கை, 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் விரலடையாள பதிவு இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கைவிரல் அடையாள பதிவு இயந்திரம் பழுதடைந்துள்ளமையினால் புதிய இயந்திரம் வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும் |